**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் மாநகரின் அணுகல்தன்மைக்கான விருதுகளுக்கு இப்போது பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 2, 2021) – ப்ராம்ப்ட்டன் மாநகரின் அணுகல்தன்மைக்கான 2021 ஆம் ஆண்டின் விருதுகளுக்கு பெயர் பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

இந்த அணுகல் விருதுகள் என்பவை, மாற்றுத்திறன் கொண்ட மக்கள் அனைவரையும் உள் சேர்த்துக்கொள்கின்ற, மற்றும் அவர்களுக்கான அணுகல் தன்மை வழங்க தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்ற, ப்ராம்ப்ட்டன் மாநகர தனிநபர்கள், தொழிலகங்கள் மற்றும் நிறுவன அமைப்புக்கள் ஆகியோரை அங்கீகரிக்கின்ற ஒரு பொது நிகழ்ச்சித்திட்டமாகும்.

கீழ்க்காணும் பகுதிகளில், சாதித்த சாதனைகள் மற்றும் பங்களிப்புக்களின் அடிப்படையில், பெயர் நியமனங்கள் யாவும் மதிப்பாய்வு செய்யப்படும்:

- **தடுப்புக்களை அகற்றுதல் மற்றும் அவை அமைப்பதற்கு முன்பாகவே தடுத்தல் –** இத்தகைய தடுப்புக்களின் தன்மையானது, நடத்தை பாவனை, தகவல் பரிமாற்ற, உடல்ரீதியான, நிகழ்ச்சித்திட்ட ரீதியான, சமூக அல்லது போக்குவரத்து ரீதியிலான அல்லது கொள்கையின் பேரிலானதாக இருக்கலாம்
- **மாற்றுத்திறன் கொண்ட நபர்களுக்கு இடம் கொடுத்தல்** – இடம் கொடுத்தல் என்பது, ஒரு இடத்தை உருமாற்றிக்கொடுத்தல், காலநேரத்தை அல்லது பணியை மாற்றிக்கொடுத்தல் ஆகியனவாக இருக்கலாம்; இதனால் எவரேனும் ஒருவர் கூட சமூகத்தினூடாக பங்கேற்க இயலும்.
- **அணுகல்தன்மைக்கான ஒரு தூதுவனாக அல்லது அதை சாதித்த வீரனாக செயல்படுதல் –** அணுகல்தன்மை பற்றிய விழிப்புனர்வை சமுதாயத்தில் ஏற்படுத்துதல்
- **மாற்றுத்திறன் கொண்ட நபர்களுக்கு வேலைவாய்ப்புக்கான ஆதரவு உருவாக்குதல்**.
- **மற்றவர்களும் பின்பற்றும் வகையிலான அணுகல்தன்மையுடன் கூடிய வாடிக்கையாளர் சேவையை வழங்குதல் –** வாடிக்கையாளரின் வேண்டுகோளைப் புரிந்துகொள்ள போதிய அவகாசம் எடுத்துக்கொண்டு, உரிய தீர்வினை வழங்குதல்.
- **சுயசார்பாக வாழவதற்கான உதவியை வழங்குதல் –** சுய திறன் கொண்டுவருவதற்கான பயிற்சி மற்றும் ஆதரவுக்கு உதவுதல்.

இந்த ஆண்டில் இது புதிது, இந்த விருதுகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு அவரவரும் தங்கள் பெயரையே பரிந்துரை செய்து கொள்ளலாம்.

ஒரு விருதுக்கு தகுதி பெறுவதற்கு, பெயர் பரிந்துரைக்கப்பட்டவர்கள் ப்ராம்ப்ட்டன் நகரவாசியாக, இருக்கவேண்டும், ப்ராம்ப்ட்டன் நகரில் இயங்கும் ஒரு சமூகமாக  லாப-நோக்கம் இல்லாத அமைப்பாக அல்லது ப்ராம்ப்ட்டன் நகரில் ஒரு தொழிலுக்கு சொந்தக்காரராக  இருக்க வேண்டும். பெயர் கொடுக்கப்படுபவர்களின் சாதனைகள் மற்றும் பங்களிப்புக்கள் ப்ராம்ப்ட்டன் நகர சமூகத்தினருக்கு பயனளித்திருக்க வேண்டும்.

பெயர் கொடுத்தலானது மார்ச் 31 ஆம் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அடுத்து வரும் வசந்தகாலத்தின்போது விருதுகள் வழங்கப்படும்.

அணுகல்தன்மைக்கான விருதுகள் பற்றிய மேலும் தகவல்களுக்கும், ஆன்லைன் பெயர் கொடுக்கும் படிவத்திற்கும், குடியிருப்புவாசிகள் இங்கு வருகை தரவும்: www.brampton.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் நகரமானது பலகலவையான நகரம்; இந்த நகரம் பல்வேறு தரப்பினர் அடங்கிய நமது சமூகத்தில் ஒருவருக்கொருவர் சொந்தம் என்பதை உணரவைக்கவும் மற்றும் அணுகல் தன்மையை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை அடையாளம் காணவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது. மாற்றுத்திறன் கொண்ட மக்களை அரவணைத்து அவர்களுக்கான அணுகல்தன்மையை மேம்படுத்துவதற்காகவே பணியாற்றுகின்ற ஒரு தனி நபர், அல்லது தொழிலகம் அல்லது நிறுவன அமைப்பு பற்றி உங்களுக்கு தெரியவந்தால் இந்த 2021 அணுகல்தன்மைக்கான விருதுகளுக்காக அவர்களின் பெயர் பரிந்துரைக்க முன்வருமாறு உங்களை நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம். நமது நகரத்தை அனைவருக்கும் ஆனதாக ஆக்க உழைப்பவர்களை அங்கீகரிக்க இதுவே ஒரு நல்ல சந்தர்ப்பம் ஆகும்.

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரத்தின், மற்றும் பீல் பிரதேசத்தின், அணுகல்தன்மைக்கான ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினராக இருந்தபடி, ப்ராம்ப்ட்டனை அணுகக்கூடியதாகவும், அனைத்து திறன்களையும் கொண்டவர்களை உள்ளடக்கியதாகவும் மாற்ற, எங்கள் நகரம் முழுவதும் உள்ள மக்கள் செய்து வரும் பணிகள் குறித்து நான் பெருமைப்படுகிறேன். எங்கள் சமூகத்தில் இருக்கின்ற ஒரு நபர், வணிகம் அல்லது அமைப்பு பற்றி உங்களுக்குத் தெரிந்தால், தயவுசெய்து அவர்களை அணுகல்தன்மைக்கான விருதுக்கு பரிந்துரைக்கவும்; நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, ப்ராம்ப்ட்டன் நகரை, அனைத்து திறன் கொண்டவர்களும் அணுகக்கூடியதாக மாற்றலாம். ”

*- பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள், 7 & 8; உறுப்பினர், ப்ராம்ப்ட்டன் நகர அணுகல்தன்மைக்கான ஆலோசனைக்குழு; உறுப்பினர், பீல் பிராந்திய  அணுகல்தன்மைக்கான ஆலோசனைக்குழு*

"ப்ராம்ப்ட்டன் நகரத்தில், எல்லா வயதினரும், திறன்களும் உள்ளவர்கள் ஒரே மாதிரியான சம வாய்ப்புகளை அனுபவிப்பதை உறுதி செய்வதில் நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டிருக்கிறோம்; மேலும் அனைத்து திறன் கொண்டவர்களும் அணுகக்கூடிய  வகையிலான இடங்களை உருவாக்குகிறோம்.

ப்ராம்ப்ட்டன் நகரில் இந்த அணுகல் தன்மையை அதிகரிக்க எங்களுக்கு உதவுகின்ற நமது சமூகத்தில் உள்ளவர்களுக்கு நன்றி. இந்த அணுகல்தன்மைக்கான விருதுகளானது, அணுகல்தன்மை ஏற்படுத்தி, அனைவரையும் உள்சேர்த்துக்கொள்வதென உறுதியளித்த தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் அமைப்புகளை அங்கீகரிப்பதற்கான ஒரு வாய்ப்பாகும். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca